

திருவெண்ணைநல்லூரில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தை முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி விவசாயிகள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான் , மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் ஓம்.சிவ.சக்திவேல், பொதுக்குழு உறுப்பினர் பக்தவத்சலம், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், துணைத் தலைவர்கள் கோமதி நிர்மல் ராஜ், ஜோதி, ஊராட்சி மன்ற தலைவர் மேகலா சதீஷ், ஒன்றிய குழு உறுப்பினர் ஏழுமலை உள்ளிட்ட விவசாய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (15.05.2025) திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட அத்தியந்தல் பகுதியில் புதிய சமுதாயம் கூடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி கட்டுமான பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், சி.என்.அண்ணாதுரை எம்.பி., மாநில தடகளச் சங்க துணைத்தலைவர் மரு.எ.வ.வே.கம்பன் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தொடர்புடைய அ.தி.மு.க. வினரைக் காப்பாற்ற

# எடப்பாடி பழனிசாமி மேற்கொண்ட பித்தலாட்டங்களுக்கு அளவே இல்லை!

## இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி அறிக்கை !

சென்னை, மே 16-

அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தொடர்புகொண்டுள்ளார்கள் என்று அறிந்தவுடன், அவர்களைக் காப்பாற்ற பழனிச்சாமி மேற்கொண்ட பித்தலாட்டங்களுக்கும் அளவில்லை; மூடி மறைக்க மேற்கொண்ட முயற்சிகளுக்கும் கணக்கில்லை என இயற்கை வளங்கள் துறை அமைச்சர் ரகுபதி அறிக்கை விடுத்துள்ளார்

அவரது அறிக்கை வருமாறு:-

பச்சைப் பொய்கள் பேசுவதில் பழனிசாமிக்கு நிகர் பழனிசாமிதான் என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தீர்ப்பு கிடைத்ததற்கு, வெட்கமே இல்லாமல் தான்தான் காரணம் என்று பெருமை பேசுகிறார் பழனிசாமி. உண்மையில் வழக்குக்கூட பதிவு செய்யாமல் குற்றவாளிகளைக் காப்பாற்றத் துடித்ததுதான் பழனிசாமி செய்த கேவலமான சாதனை.

அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் இந்த வழக்கில் தொடர்புகொண்டுள்ளார்கள் என்று அறிந்தவுடன், அவர்களைக் காப்பாற்ற பழனிச்சாமி மேற்கொண்ட பித்தலாட்டங்களுக்கும் அளவில்லை; மூடி மறைக்க மேற்கொண்ட முயற்சிகளுக்கும் கணக்கில்லை! அப்பொழுது திமுகவும் இதர எதிர்க்கட்சிகளும் நடத்தியப் போராட்டங்களின் விளைவாகத்தான் வேறு வழியின்றி பொள்ளாச்சி வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டது. அதனை மக்கள் மறந்திருப்பார்கள் என நினைத்துக் கொண்டு



நாடகமாடிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

இந்தப் பித்தலாட்டத்தை இன்று முதலமைச்சர் சுட்டிக் காட்டி பேசியதும் ஓடோடி வந்து அவதூறுகளை அள்ளி வீசி சென்றிருக்கிறார் பித்தலாட்டக்கார பழனிசாமி!

பொள்ளாச்சி வழக்கில் இன்று கிடைத்திருக்கிற தீர்ப்புக்கு, தி.மு.க.வுக்கு என்ன பங்கு உள்ளது என கேட்கிறார் பழனிசாமி. தி.மு.க. தலைவர் இப்பிரச்னையை கையில் எடுத்திருக்காவிட்டால் 2021 வரை இந்த லீலைகளை அ.தி.மு.க. நிர்வாகிகள் நடத்தி இருப்பார்கள். இன்னும் ஆயிரக்கணக்கான பெண்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள். இந்த தீர்ப்புக்கு தி.மு.க. காட்டிய உறுதிப்பாடும் போராட்டங்களும்தான் காரணம் என்பது தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் சகோதரரைத் தாக்கியது, பாதிக்கப்பட்ட பெண்களின் பெயர்களை வெளியிட்டு அச்சுறுத்தியது என பாதிக்கப்பட்டவர்களை மிரட்டியதுதான் பொள்ளாச்சி வழக்கில் பழனிசாமி ஆட்சியின் சாதனை. இன்றைக்கு பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர்கூட பிறழ் சாட்சியமாக மாறாமல் இருந்திருக்கிறார்கள் என்றால், தமிழ்நாட்டில் முதலமைச்சர் பெண்களுக்கு ஏற்படுத்தியிருக்கிற பாதுகாப்பான சூழலும், குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் எனும் நம்பிக்கையும் தான் காரணம்.

யார் அந்த சார்? என அருவருப்பு பிரச்சாரத்தை மேற்கொண்டு தோற்றுப் போன பழனிசாமி, அண்ணா பல்கலைக்கழக வழக்கில் தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளை உயர்நீதி மன்றமே பாராட்டியது என்பதை அறிவாரா?

பழனிசாமியின் பதட்டத்திற்குக் கொடநாடு கொலை வழக்குப் பற்றி முதலமைச்சர் பேசியிருப்பதுதான் காரணம். தனது கட்சியின் தலைவர் வாழ்ந்த வீட்டையே பாதுகாக்க முடியாமல் அவல ஆட்சி நடத்திய பழனிசாமிக்குக் கொடநாடு என்றவுடன் ஏன் தொடை நடுங்குகிறது?

டெல்லியில் பதுங்கிப் பதுங்கி அமித்ஷாவைச் சந்தித்த பழனிசாமி, எதற்காக சந்தித்தார் என்பது பச்சைக் குழந்தைக்கும் தெரியும். அதனை அறியாமல் பச்சைப் பொய்களை அடித்து விட்டுக் கொண்டிருக்கிறார் பழனிசாமி!

நூறுநாள் வேலைத்திட்டம், மெட்ரோ திட்டம் ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்க வேண்டி ஒன்றிய அரசுக்குக் கடிதம் வாயிலாகவும், நேரிலும், நாடாளுமன்றத்தின் வாயிலாகவும் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்தது தமிழ்நாடு அரசு, மக்களைத் திரட்டிப் பல போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தியது தி.மு.க.

ஆனால் தனது சந்திப்பால்தான் நிதி கிடைத்தது என கூசாமல் 'Cringe' செய்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி!

அமித்ஷாவைப் பார்க்கப் போகிறேன் என்பதைச் சொல்லக்கூட திராணி இல்லாமல், டெல்லியில் கட்சி அலுவலகத்தைப் பார்க்கப் போகிறேன் என்று சொன்னாரே கோழைசாமி, அதுதான் Original பித்தலாட்டம்!

ஒன்றிய அரசின் ரெய்டு நடவடிக்கையால், தனக்கோ தன் மகனுக்கோ சம்மந்திக்கோ பாதிப்பு வந்துவிடக்கூடாது. பணம், சொத்துக்கள் முடக்கப்பட்டு விடக்கூடாது என்ற பயத்தில்தான் பாஜகவோடு கூட்டணி வைத்தார். தனது பணத்தை காப்பாற்றிக் கொள்ள போராடிய பழனிசாமி, தமிழ்நாட்டுக்கு நிதியை வாங்கி கொடுத்தார் என்றால் பழனிசாமியின் பேரன்கூட நம்பமாட்டான்.

தி.மு.க. மக்களிடம் பெற்றிருக்கும் பேராதரவால் தன்னிலை இழந்து என்ன செய்வது என்று தெரியாமல் மனம்போன போக்கில் உளறிக் கொட்டிக் கொண்டிருக்கிறார்.

இரண்டு ரெய்டுகளுக்குப் பயந்து தனது கட்சியையே டெல்லியில் அடகு வைத்துவிட்டு வந்த எடுபுடி பழனிசாமிக்கு, மாநில உணர்வு என்று சொல்லுவதற்குத் தகுதி இல்லை. பழனிசாமியின் இந்தக் கபட நாடகங்கள் எந்தக் காலத்திலும் மக்களிடம் வெற்றிபெறப் போவதில்லை. படுதோல்வி பழனிசாமி எனும் அடையாளம் மாறப் போவதுமில்லை.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### 4 ஆண்டுகளில் ஏழை எளிய மக்களுக்கு 53,333 குடியிருப்புகள் வழங்கி

# தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சாதனை!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆய்வுக் கூட்டத்தில் தகவல்!

சென்னை, மே 16 -

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கடந்த 4 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியை நேற்று (15.5.2025) திறந்து வைத்து, குறும்படத்தினை வெளியிட்டார். அதனை தொடர்ந்து அமைச்சர் தலைமையில் சட்டபேரவை அறிவிப்புகள் மற்றும் வாரிய பணிகள் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் தா.மோ அன்பரன் பேசுகையில் "கழக அரசு பொறுப்பேற்று கடந்த 4 ஆண்டில் ரூ.3,490. 35 கோடி மதிப்பீட்டில் 65 திட்டப்பகுதிகளில் 22,719 குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கப்பட்ட திட்டங்களில், பல பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. ரூ.5,418.58 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வந்த 47,419 அடுக்குமாடி குடியிருப்புகளின் பணிகள் முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கட்டப்பட்ட புதிய குடியிருப்புகள் முதல்வர் அவர்களின் உத்தரவின் படி மகளிர் பெயரில் 53,333 வீடுகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கி அவர்களை சமூகத்தில் மதிப்புமிக்கவர்களாக மாற்றியுள்ளது. மறுகட்டுமான திட்டத்தின் கீழ் குடியிருப்புதாரர்கள் இடம்பெயர வழங்கப்பட்ட கருணைத் தொகை ரூ.8000/ த்தினை ரூ.24,000/ மாக உயர்த்தி இதுவரை 10,081 குடும்பங்களுக்கு ரூ.23.96 கோடி கருணைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் பொது மக்களிடம் கொண்டு செல்ல 4 ஆண்டு சாதனை புகைப்படக் காட்சி இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் ஒரு மாத காலத்திற்கு வாரிய திட்டப் பகுதிகளில் இந்த கண்காட்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள மறுகட்டுமான திட்ட ப்பகுதிகளில் கருணைத் தொகை வழங்குவது, வீடுகளை காலி செய்வது, குடியிருப்புகளை இடிப்பது, ஆகிய பணிகளை அடுத்த மாதத்திற்குள் முடிக்க வேண்டும். பழுது பார்ப்பது மற்றும் புனரமைப்பு திட்டத்தின் கீழ் நடப்பாண்டும் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகளை புனரமை க்கப்பட வேண்டி உள்ளது. எனவே, தலைமை பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் இதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

100 சதவிகிதம் கட்டிடப்பணிகள் முடிக்கப்பட்டுள்ள திட்டப்பகுதிகளில் குடிநீர், மின்சாரம், அடிப்படை வசதிகளை விரைவாக நிறைவேற்றி திறப்பு விழாவிற்கு கொண்டு வர வேண்டும். திறப்பு விழாவிற்கு தயாராக உள்ள திட்டப்பகுதிகளை தலைமைப் பொறியாளர்கள் ஆய்வு செய்ய வேண்டும். இந்த ஆண்டு இறுதிக்குள் திறப்பு விழாவிற்கு கொண்டு வர வேண்டிய திட்டப்பணிகளை தாமதம் இன்றி நிறைவேற்ற வேண்டும். புதிதாக கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளை வல்லுநர்கள் குழு க்கொண்டு ஆய்வு செய்து அறிக்கை பெறப்பட வேண்டும். திறந்து வைக்கப்பட்ட திட்டப்பகுதிகள் முடியும் தருவாயில் உள்ள திட்டப்பகுதிகளுக்கு பயனாளிகளை தேர்வு செய்ய வேண்டும்.

MUDP, TNUDB மனைகளுக்கு கிரையப்பத்திரம் வழங்குவதற்கு அந்தந்த திட்டப்பகுதிகளிலேயே முகாம்கள் நடத்தப்பட வேண்டும். வாரிய குடியிருப்புதாரர்களிடமிருந்து தவணைத் தொகைகளை காலம் தாழ்த்தாது வசூலிக்கப்பட வேண்டும். பணியாளர்கள் முழு அளவில் நியமிக்கப்பட்டுள்ளதால் தவணைத் தொகை வசூலிப்பதில் காலத்தாமதம் இனி இருக்கக் கூடாது. சட்டமன்றஉறுப்பினர்கள் சுட்டிக்காட்டும் திட்டங்களை கால தாமதம் இன்றி, நிறைவேற்ற வேண்டும். அனைத்து திட்டப் பகுதிகளிலும் குடிநீர், மின்சாரம், மின்தூக்கி ஆகியவற்றை முறையாக பராமரிக்க வேண்டும். கழிவுநீர் தேங்காதவாறு தூய்மையாக பராமரிக்க வேண்டும். இதனை வாரியப் பொறியாளர்கள் உடனுக்குடன் கவனித்து மேல்நடவடிக்கை எடுத்து பொதுமக்களிடம் இருந்து எவ்வித புகார்களும் வராதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா , தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா , வாரிய இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜய கார்த்திகேயன், வாரிய செயலாளர் திரு.நா.காளிதாஸ், வாரிய தலைமை பொறியாளர்கள் வி.எஸ். கிருஷ்ணசாமி, திரு.சு.லால் பகதூர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

# திருப்பூரில் மாநில அளவிலான 8-வது களரிப் பட்டு பயிற்சி!

திருப்பூர். மே 16.

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளத்தில் மாநில அளவிலான 8வது களரிப் பட்டு போட்டி கடந்த வாரம் நடைபெற்றது. இதில் மாநிலம் முழுவதிலிருந்து பல்வேறு களரிப்பட்டு பயிற்சி மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள். இதில் சிவகங்கை மாவட்டம் அரளிக் கோட்டை அமைச்சர் கே ஆர் பெரியகருப்பன் தந்தை நினைவாக பி.அழ.கருத்தான் கோனார் கருப்பாயி அம்மாள் தற்காப்பு பள்ளி பயிற்சி மாணவ மாணவிகள் பங்கேற்றார்கள்.

இந்த போட்டியில் சப்ஜூனியர், சீனியர் ,ஜூனியர், என பல்வேறு பிரிவுகளில் போட்டி கள் நடைபெற்றது. மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளில் அரளிகோட்டைகருத் தான் கருப்பாயி அம்மன் பயிற்சி பள்ளி மாணவிகள் குமுதனி, கவிராஜ் ,ஜீவன் ராஜன், சுசீந்திரன், மோகனேஷ், ஜெயதர் ஷினி, ஹரிணி ,ஜெயதர்ஷினி காமேஷ் கிஷோர் ,ராகவர்ஷினி, பிரியா ,பவானி பாரதி, சந்தோஷ் குமார், கவிராஜ் ,மனோஜ் குமார் , பிரியா, குமுதிணி உட்பட 16 மாணவ மாணவிகள் 2 தங்கம், 5 வெள்ளி, 16 வெங்கலம் ஆக மொத்தம் 23 பதக்கங்களை வென்றார்கள் .

இவர்கள் வருகிற மே 30 ,31 ,ஜூன் 1, ஆகிய மூன்று நாட்கள் கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபேற உள்ள சர்வதேச போட்டிகளில் பங்கேற்று விளையாட தேர்வாகி உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. களரி பட்டு போட்டியில் தங்கம், வெள்ளி ,வெண்கலம் உட்பட 23பதக்கங்களை பெற்ற ம ா ண வி க ை ள கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பாராட்டி சர்வதேச போட்டிகளில் வெற்றி பெற வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் மாணவிகளுக்கு ஊக்கம் அளித்த பயிற்சியாளர்கள் அரளிக் கோட்டை பாலா, முத்துப்பாண்டி ,பிரேமா ஆகியோரை அமைச்சர் பாராட்டினார். இதில் ,மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, அயலக அணி துணை அமைப்பாளர் சன் சீமான் சுப்பையா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம் 7–க்கு உட்பட்ட புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் வடக்கு, தஞ்சாவூர் மத்திய, மயிலாடுதுறை, நாகப்பட்டினம் ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்ட–மாநகரச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட–மாநகர அமைப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 14-05-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி





விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம், வெட்டுக்காடு ஊராட்சியில் "நாடுபோற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி, தலைமைக் கழக பேச்சாளர்கள் கவிஞர் மங்கலம் பிரபாகரன் மற்றும் த.இன்பக்குமரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். நிகழ்ச்சியில் ம.ஜெயச்சந்திரன், தேன்மொழி, காடுவெட்டி ஏழுமலை, ஜெய.ரவிதுரை, வேம்பி.ரவி, ஜெ.ஜெயபால், சங்கீதா அரசி, மீனா வெங்கடேசன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.